**தமிழ் இணையக் கல்விக்கழகம்**
**சென்னை – 600 025.**

**UM00 உகரம் (Ukaram)**

**இணையவழித் தேர்வு (Online Exam)**

**வினாத்தாள் அமைப்பு**

**நேரம்: 30 மணித்துளிகள்** **மதிப்பெண்கள்: 25**

## பகுதி – அ
## கோடிட்ட இடங்களை நிரப்புதல்

- பாடங்களின் 'படிப்போம்' பகுதியிலிருந்து பாடத்திற்கு ஒரு வினா வீதம் ஐந்து வினாக்களைக் 'கோடிட்ட இடத்தை நிரப்புக' வடிவில் அமைக்கப்படும். (முதல் மற்றும் இரண்டாம் பருவங்களிலிருந்து மூன்று, இரண்டு என வினாக்கள் அமைக்கப்படும்)
(5x1 = 5 மதிப்பெண்கள்)

## பகுதி – ஆ
## பொருந்தாததை வட்டமிடுதல்

- இலக்கணப் பகுதியிலிருந்து பொருந்தாததைக் கண்டுபிடிக்கவும் அல்லது பொருத்தவும் என்ற அமைப்பில் வினாக்கள் அமைக்கப்படும்.
(5x1 = 5 மதிப்பெண்கள்)

## பகுதி – இ
## பொருத்துதல்

- பாடத்தின் 'அறிந்துகொள்வோம்' பகுதியிலிருந்து ஐந்து வினாக்கள் 'பொருத்துக' வடிவில் அமைக்கப்படும். (இரண்டு பருவங்களிலிருந்தும் வினாக்கள் அமைக்கப்படும்) (5x1 = 5 மதிப்பெண்கள்)

## பகுதி – ஈ
## சரியான விடையைத் தேர்ந்தெடுத்தல்

❖ பாடங்களின் எந்தப் பகுதியிலிருந்தும் ஐந்து வினாக்கள் 'சரியான விடையைத் தேர்ந்தெடுப்போம்' என்ற வடிவில் அமைக்கப்படும். (முதல் மற்றும் இரண்டாம் பருவங்களிலிருந்து மூன்று, இரண்டு என வினாக்கள் அமைக்கப்படும்)

(5x1 = 5 மதிப்பெண்கள்)

## பகுதி – உ
## சரியா தவறா எனக் குறித்தல்

❖ பாடத்தின் படிப்போம், தகவல்துளி/ சுவைச்செய்திப் பகுதிகளிலிருந்து பாடத்திற்கு ஒரு வினா வீதம் ஐந்து வினாக்கள் சரியா? தவறா? வடிவில் அமைக்கப்படும். (முதல் மற்றும் இரண்டாம் பருவங்களிலிருந்து மூன்று, இரண்டு என வினாக்கள் அமைக்கப்படும்)

(5x1 = 5 மதிப்பெண்கள்)

*****

**தமிழ் இணையக் கல்விக்கழகம்**
**சென்னை – 600 025.**

**UM00 உகரம் (Ukaram)**

**எழுத்துத் தேர்வு (Written Exam)**

**வினாத்தாள் அமைப்பு**

**நேரம்: 2.30 மணி நேரம்** **மதிப்பெண்கள்: 75**

**பகுதி – அ**
**படித்தல் திறன்**

- கேட்டல் கருத்தறிதல் பகுதியிலிருந்து ஏதேனும் ஒரு பகுதி தேர்ந்தெடுக்கப்பட்டு ஒரு வினா அமைக்கப்படும். (5x1 = 5 மதிப்பெண்கள்)

- பாடப்பகுதியிலுள்ள கருத்துவிளக்கப்படம் பகுதியிலிருந்து ஏதேனும் ஒரு பகுதியை அடிப்படையாகக்கொண்டு ஐந்து வினா அமைக்கப்படும். (5x1 = 5 மதிப்பெண்கள்)

**பகுதி – ஆ**
**இலக்கணப் பகுதி**

- **இலக்கணப் பகுதியிலிருந்து மூன்று வினாக்கள் அமைக்கப்படும்.**

  - பாடம் 1 (பெயர்ச்சொல்), 3 (பெயர்ச்சொல்), 5 (பெயரெச்சம்), 7 (வினையெச்சம்), 19 (பெயரெச்ச வகைகள்), 21 (வினையெச்ச வகைகள்), 29 (புணர்ச்சி) ஆகிய பாடங்களிலிருந்து ஒரு வினா பொருத்துக வடிவில் அமைக்கப்படும். (5x1 = 5 மதிப்பெண்கள்)

  - பாடம் 2, 12, 18 (மரபுத்தொடர்), 4, 8 (இணைமொழிகள்), 20 (இரட்டுறமொழிதல்) ஆகிய பாடங்களிலிருந்து ஒரு வினா அமைக்கப்படும். (5x1 = 5 மதிப்பெண்கள்)

  - பாடம் 24 (உவமைத்தொடர்), 25 (வழுநிலைத்தொடர்), 26 (கருத்துமாறாத் தொடர்), 27 (வழாநிலைத்தொடர்), 28 (தொகைச்சொற்கள்) ஆகிய பாடங்களிலிருந்து ஒரு வினா அமைக்கப்படும். (5 மதிப்பெண்கள்)

## பகுதி – இ
## படிப்போம் பகுதி

❖ **குறுவினாக்கள்:**

பாடப்பகுதியிலிருந்து ஏதேனும் ஐந்து பாடத்திலிருந்து பாடத்திற்கு ஒரு வினா வீதம் ஐந்து வினாக்களுக்கு விடையளிக்குமாறு வினா அமைக்கப்படும்.

(5x1 = 5 மதிப்பெண்கள்)

❖ **பெரு வினா:**

பாடப்பகுதியிலிருந்து ஏதேனும் எட்டு பாடத்திலிருந்து பாடத்திற்கு ஒரு வினா வீதம் ஐந்து வினாக்கள் கொடுத்து இரண்டனுக்கு விடையளிக்குமாறு வினா அமைக்கப்படும். (இரண்டு பருவங்களிலிருந்தும் வினாக்கள் அமையும்.)

(2x5 = 10 மதிப்பெண்கள்)

## பகுதி – ஈ
## செய்யுள் பகுதி

❖ **செந்தமிழ்ச்செல்வம்** பகுதியிலிருந்து இரண்டு வினா அமைக்கப்படும்.

➢ செந்தமிழ்ச்செல்வம் பகுதியில் கொடுக்கப்பட்டுள்ள திருக்குறளில் ஏதேனும் ஐந்து திருக்குறள்களை எடுத்து அதன் ஒரு சொல்லை மட்டும் நீக்கி, நிறைவு செய்க என்ற அடிப்படையில் வினாக்கள் அமையும்.

(5x1 = 5 மதிப்பெண்கள்)

➢ ஏனைய பகுதியிலிருந்து ஐந்து வினாக்கள் கொடுத்து அதில் இரண்டனுக்கு விடையளிக்குமாறு வினா அமையும்.

(2x2.5 = 5 மதிப்பெண்கள்)

## பகுதி – உ
## மொழிபெயர்ப்போம் பகுதி

❖ **மொழிபெயர்போம் :**

பாடப்பகுதியிலிருந்து மொழிபெயர்ப்போம் பகுதியைத் தேர்ந்தெடுத்து எளிமையாக இரண்டு வினாக்கள் அமைக்கப்படும்.

(2x5 = 10 மதிப்பெண்கள்)

**பகுதி – ஊ**

**படைப்பாற்றல் திறன்**

- சொற்களைத் தொடரில் அமைத்து எழுதுக என்னும் பகுதியிலிருந்து இரண்டு வினாக்கள் கொடுத்து விடை எழுதுமாறு வினா அமைக்கப்படும்.

(2x2.5 = 5 மதிப்பெண்கள்)

- படைப்பாற்றலை வளர்க்கும் விதமாகக் கடிதம், கட்டுரை, கவிதை போன்றவற்றை ஏதேனும் மூன்று தலைப்புகள் கொடுக்கப்பட்டு, அதில் ஒன்றினுக்கு விடை எழுதுமாறு வினா அமைக்கப்படும்.

(1x10 = 10 மதிப்பெண்கள்)

*****